தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, மார்ச் 29, புதன்கிழமை,

பங்குனி 16, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.''

நாம் மேற்கொள்ளும் ஒரு செயலில் திட்பம் என்பது ஒருவனுடைய மன உறுதியே ஆகும். அந்த உறுதி தவிர மற்றவையெல்லாம் வேறானவை.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. ஜி. மாணிக்கம் அவர்கள் 8—3—1989ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி, ஜி. மாணிக்கம் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டு வரையில் நம்பியூர் ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்தும், மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையில் பெரியார் மாவட்டம் பவானி ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்தும், இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றி உள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.)